**நாம் செய்ய வேண்டியதென்ன?**

- “திரு அவையின் உள்ளியல்பிலிருந்தே நற்செய்திப் பணி பிறக்கிறது” (திநப, எண் 6) என்பதால், அப்பணியானது தொய்வுறாது தொடர்ந்து நடைபெற நாம் குடும்பமாகவும் பங்கு எனும் இறைச்சமூகமாகவும் இறைவேண்டல் செய்வோம் (லூக் 10:2).
- நற்செய்தி அறிவிப்புப் பணியானது அருட்பணி நிலையினருக்கானது என்பது தவறான பார்வை. நற்செய்திப் பணியை எக்காலத்திற்கும் எவ்விடத்திலும் ஆற்றுவதென்பது திருமுழுக்குப் பெற்ற அனைவருக்குமானது என்பதை உணர்ந்து நாம் செயலாற்றுவோம் (திநப எண் 6; பொதுநிலையினரின் திருத்தூதுப்பணி, எண் 6).
- நம் குடும்பம் மற்றும் பங்கில் ஆர்வமுள்ள ஆண்-பெண் இளைஞர்களை அருட்பணி வாழ்வுக்கென அர்ப்பணிக்க உதவுவோம்.
- பங்கிலும் பங்கினைச் சார்ந்த இடங்களிலும் பிற கிறிஸ்தவ சபையினரோடும் பிற சமயத்தினரோடும் இணைந்து உரையாடல் மற்றும் நற்செயல்கள் புரிவதன்வழி நற்செய்தி அறிவிப்புப் பணியைத் தொடர்வோம்.
- திருத்தந்தையால் மேற்கொள்ளப்படும் உலகளாவிய நற்செய்தி அறிவிப்புப் பணியை நாம் ஆதரிப்பதன் அடையாளமாகத் தாராள உள்ளத்தோடு காணிக்கை வழங்குவோம். நாம் வழங்கும் இப்பொருளுதவி நற்செய்தி அறிவிக்கப்படாத இடங்களில் அறிவிக்கப்படவும் வாழ்வுக்கான தேவைகளில் இருப்போருக்கு உதவிடவும் திருத்தந்தையின் மறைத்தூதுக் கழகங்களால் பயன்படுத்தப்படுகின்றது என்னும் நிறைவைப் பெறுவோம்.

நற்செய்தி அறிவிப்பின் விண்மீனாகவும் துயருறுவோருக்கு ஆறுதல் தருபவருமான அன்னை மரியா நமக்காகத் தொடர்ந்து பரிந்து பேசி, நம்மைக் காப்பாராக!

கிறிஸ்துவின் மனநிலையில்,

+ SNazarene

**+ நசரேன் சூசை**
கோட்டாறு ஆயர்

---

**குறிப்பு** : இச்சுற்றுமடல் 25.10.2020 ஞாயிறன்று அனைத்து ஆலயங்களிலும் நிறுவனங்களிலும் திருப்பலியின்போது வாசிக்கப்பட வேண்டும்.

Bishop's House, P.B. No:17,
Asaripallam Road, Nagercoil - 629 001.
Kanniyakumari District, Tamil Nadu, India.
Phone : Off : +91 - 4652-278343, 279152, 279933
: Per : +91 - 4652-278868
Fax : +91 - 4652 - 278570
E-mail : kottardiocese@yahoo.co.in
Website : www.kottardiocese.org

**Most Rev. Nazarene Soosai Th. D.,D.D.**
Bishop of Kottar

No. C-26 /2020 20.10.2020

# நற்செய்தி அறிவிப்பு ஞாயிறு

## 01.11.2020

கிறிஸ்து இயேசுவில் அன்பிற்கினிய சகோதரர்களே சகோதரிகளே, நலம் வாழ வாழ்த்துகள்!

ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் மூன்றாம் ஞாயிறை திரு அவை ‘நற்செய்தி அறிவிப்பு’ ஞாயிறாகக் கொண்டாடி வருவதை நாம் அறிவோம். கொரோனா பெருந்தொற்று உலகையே உலுக்கிக்கொண்டிருக்கின்ற இந்த ஆண்டின் நற்செய்தி அறிவிப்பு ஞாயிறின் மையச் சிந்தனையாக இறைவாக்கினர் எசாயாவின் அழைப்புப் பற்றிய பகுதியில் காணப்படும் “இதோ நானிருக்கிறேன். அடியேனை அனுப்பும்” (எசா 6:8) என்பதனை நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தந்துள்ளார். இம்மையக் கருத்தினையொட்டி நம் மறைமாவட்டத்தில் **நவம்பர் 01, ஞாயிறன்று** நாம் சிறப்பிக்கவிருக்கும் நற்செய்தி அறிவிப்பு நாளுக்கான சிந்தனைகள் சிலவற்றை உங்களோடு பகிர்ந்திட நான் விழைகின்றேன்.

**“யாரை நான் அனுப்புவேன்?”(எசா 6:8)**

இந்த உலகம் இதுவரை எதிர்கொண்டிராத துயர்மிகு இக்காலச்சூழல் நம்மைக் கலக்கத்திற்கு உள்ளாக்கி இருக்கிறது. நற்செய்தியில் நாம் காணும் படகிலே பயணப்பட்ட சீடர்கள் கனன்று வீசிய காற்றையும் கொந்தளித்த கடலையும் கண்டு அஞ்சி ஒருசேர, “சாகப் போகிறோமே! உமக்குக் கவலையில்லையா?” (மாற் 4:38) என இயேசுவை நோக்கிக் கவலையோடு குரலெழுப்பியதுபோல, நாமும் அச்சமுற்றிருக்கின்றோம். கொரோனா பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களின் பெரும் எண்ணிக்கையும் அன்றாடம் மரணித்துக்கொண்டிருக்கும் மனிதரையும் எண்ணும்போது இயல்பாகவே நம் மனதில் கலக்கம் எழுகின்றது. இன்னும் எவ்வளவு காலம் இச்சூழல் நீடிக்கும் என அறியாது திக்குத்தெரியாமல் இருக்கின்றோம். இப்பெருந்தொற்றுக் காலச்சூழலின் துன்பமும் மரணமும் நம்முடைய மனித வலுவின்மையை அப்பட்டமாய் உணரச் செய்திருக்கின்றன என்பதே உண்மை.

உலகமே செய்வதறியாது திகைத்து நிற்கின்ற இச்சூழலில்தான் “யாரை நான் அனுப்புவேன்?” (எசா 6:8) என்ற கடவுளின் இரக்கமிக்க இதயத்திலிருந்து எழுகின்ற இந்தக் கேள்வி திரு அவையையும் ஒட்டுமொத்த

உலகையும் அச்சத்தில் முடங்கிவிடாது, நம்பிக்கையை நற்செய்தியாக அறிவிக்க நமக்கு அழைப்பு விடுக்கின்றது. மட்டுமல்லாது, கடவுளின் இந்த அழைப்பானது நம்மை ஆட்கொள்ளும் கிறிஸ்துவின் பேரன்பினாலும் (2கொரி 5:14) பிறர்மீதான அன்பினாலும் தூண்டப்பெற்று நாம் நம்முடைய 'சுகமான மண்டலங்களிலிருந்து' வெளியேறித் தொண்டாற்றவும் பிறரன்புச் செயல்களில் ஈடுபடவும் நம்மை உந்தித் தள்ளுகின்றது (நற்செய்தியின் மகிழ்ச்சி, எண் 20). அதே சமயத்தில், நாம் தளர்ந்தும் சோர்ந்தும்விடாது வாழ்வுக்கான ஆழ்ந்த விருப்பத்தையும் விடுதலைத் தாகத்தையும் இக்கேள்வி நமக்கு நினைவுறுத்துகின்றது. இன்னும் கூடுதலாய், இறைவன் நம்மிடம் ஒப்படைத்துள்ள நற்செய்தி அறிவிப்புப் பணியானது நாம் எதிர்கொண்டிருக்கும் பயத்திலிருந்து நமக்கு விடுதலை தந்து, பிறருடைய முழுநல வாழ்வுக்காய் நம்மையே அச்சமின்றித் துணிவுடன் கையளிக்கவும் இக்கேள்விவழி நம்மைத் தூண்டுகின்றது.

**இயேசுவின் வழியில் திரு அவை**

"தந்தையால் அர்ப்பணிக்கப்பட்டு அவரால் உலகுக்கு அனுப்பப்பட்ட" (யோவா 10:36) கிறிஸ்து, இவ்வுலகில் தான் அனுப்பப்பட்டதன் நோக்கத்தை இவ்வாறு கூறுகிறார்: "ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும் சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்" (லூக் 4:18-19). எனவே, இறைத்தந்தையின் நற்செய்தியாகவும் நற்செய்தி அறிவிப்பாளராகவும் இயேசு இருக்கிறார். அவரது வாழ்வும் பணியும் நற்செய்தி அறிவிப்பின் மையமாக இருக்கிறது.

ஆண்டவர் இயேசு எதை முழக்கமிட்டு அறிவித்தாரோ, மானுட முழுவிடுதலைக்காய் எத்தகைய இறையாட்சிப் பணிகளைச் செய்தாரோ அவையெல்லாம் எருசலேம் தொடங்கி (லூக் 24:47) உலகின் கடையெல்லை வரைக்கும் (திப 1:8) பறைசாற்றப்பட வேண்டும் என்பதே அவரது விருப்பமாக இருந்தது. எனவேதான், தன்னை அனுப்பிய தந்தையிடம் செல்லும்முன் இயேசு, "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற் 16:15) எனத் திருத்தூதர்களுக்குக் கட்டளையிட்டார். இதனால் திரு அவையும் கிறிஸ்து தன்னிடம் ஒப்படைத்துள்ள நற்செய்தி அறிவிப்புப் பணியைத் தன்மீது சுமத்தப்பட்ட கடமையாகக் கொண்டுள்ளது (நற்செய்தியின் மகிழ்ச்சி, எண் 111). இதையே இரண்டாம் வத்திக்கான் சங்கமும், "நற்செய்தி அறிவிப்பதே பயணம் செய்யும் திரு அவையின் இயல்பான பணி" (திருச்சபையின் நற்செய்திப்பணி, எண் 2) எனத் தெளிவுறக் கூறுகிறது. இந்த 'இயங்கும் திரு அவையே' (Church on the move) நம்மை நற்செய்தி அறிவிப்புப் பணியாற்ற எங்கும் அனுப்புகிறது.

**நற்செய்தி அறிவிப்புப் பணி ஒரு தொடர் நிகழ்வு**

நற்செய்தி அறிவிப்புப் பணி என்பது ஒரு நிகழ்ச்சி நிரலோ (Programme) தொழில்முனைவோ (Enterprise) அல்ல. அஃது ஒரு தொடர் நிகழ்வு. அது 'யாரை நான் அனுப்புவேன்?' என்ற இறைவனின் அழைப்பிற்கு விழிப்புணர்வுடன் நாம் தரும் பதில்மொழி ஆகும். இந்த உலகிலும் திரு அவையிலும் மாறிவரும் வெவ்வேறு காலச்சூழலைக் கண்டுணர்ந்து, தெளிந்து தேர்ந்து, அவரது விருப்பத்தை நிறைவேற்றும் பணிகள் ஆற்றுவதே ஆகும். இறைவாக்கினர் எசாயாவைப் போல "இதோ நானிருக்கிறேன், அடியேனை அனுப்பும்" (எசா 6:8) என உள்ளார்ந்த தாராள மனநிலையோடு இறைவனுக்குப் பதில் தருவதாகும். கடவுளின் தாய் மரியாவைப் போல, "நான் ஆண்டவரின் அடிமை; உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக் 1:38) என முற்றிலும் இறைவனுக்குத் தன்னைக் கையளித்து அவரது விருப்பத்திற்கேற்ப தொண்டாற்றத் தயாராக இருப்பதாகும். இவ்வாறு கடவுள் தங்களை அழைத்தபோது முதலில் தயங்கினாலும் பின்னர் தாராள மனநிலையோடு இறைப்பணி செய்ய முன்வந்த விவிலியம் காட்டும் சிறந்த மாந்தர்கள் (எபி 12:1) நாமும் இக்காலத்தில் நற்செய்தி அறிவிப்புப் பணி செய்ய தூண்டுதலாய் அமைகின்றார்கள்.

**காலத்திற்கேற்ற பணிகள்**

முற்காலத்தில் இறைவாக்கினர்களும் பிற்காலத்தில் புனிதர்களும் ஆற்றிய பணிகளை இக்காலத்தில் அப்படியே நகலெடுத்துச் செய்ய வேண்டியது அல்ல நமக்குக் கடவுள் விடுக்கும் நற்செய்தி அறிவிப்புப் பணிக்கான அழைப்பு. இந்தப் பெருந்தொற்றுக் காலத்தில் கடவுள் நம்மிடம் என்ன சொல்கிறார் எனப் புரிந்துகொள்வதே நம் முன்னிருக்கும் முதன்மையான சவால் ஆகும்.

இக்காலத்தில் தனிமனித இடைவெளி பேணுவது என்பது வீட்டில் முடங்கி விடுவதன்று; காலத்தின் அறிகுறிகளைக் கண்டுணர்ந்து அலட்சியமின்றி சமூக உறவினையும் இறைவனுடன் உறவினையும் வளர்க்க வேண்டிய சவாலையும் முன்னிறுத்துகின்றது. கொரோனா காலத்திற்கு முன்பிருந்தது போல நம் கோவில்களில் வழிபாடுகள் கொண்டாட முடியாத இச்சூழலிலும் நம் இல்லங்களில் எவ்வாறு அருள்வாழ்வுச் செயல்களில் அதிகம் ஈடுபட முடியும் என்ற சவாலையும் இக்காலம் முன்வைக்கிறது. அனைத்துப் படைப்பையும் பராமரிப்பதையும் இயற்கையை நேசிக்கின்ற பொறுப்புணர்வையும் நமக்கு உணர்த்தியுள்ளது. இச்சூழலில்தான் "யாரை நான் அனுப்புவேன்?" என்ற கடவுளின் கேள்விக்கு, "இதோ நானிருக்கிறேன், அடியேனை அனுப்பும்" (எசா 6:8) என்று நாம் பதில் கூற வேண்டிய கடமை உள்ளது. ஏனென்றால், தன் மகன் இயேசு கிறிஸ்துவின் பாடுகள், இறப்பு மற்றும் உயிர்ப்பு வழியாக இறைத்தந்தை தந்த விடுதலை வாழ்வை, இக்காலத்தில் நாம் கொணரவே நம்மை அழைத்து நற்செய்தி அறிவிப்புப் பணிக்கென கடவுள் அனுப்பி விடுகின்றார்.